உறையூர்

அருள்மிகு. வெக்காளியம்மன் திருக்கோயில்

சக்தி தலம்

52-ஆம் ஆண்டு சதசண்டி பெருவேள்வி அழைப்பிதழ்

01.09.2026 செவ்வாய்கிழமை முதல் 04.09.2026 வெள்ளிக்கிழமை வரை

வேண்டும் வரம் தருவாள் ! வெக்காளி துணை தருவாள் !!



உ

வேண்டும் வரம் தருவாள்!　　　　　　　　வெக்காளி துணை வருவாள்!

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

உறையூர்

அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில்

சக்தி ஸ்தலம்

திருச்சிராப்பள்ளி - 620 003.　　போன் : 0431 - 2761869

52-ஆம் ஆண்டு சதசண்டி பெருவேள்வி அழைப்பிதழ்

திருவள்ளுவராண்டு 2057
ஆவணி மாதம் 15 ஆம் நாள் முதல் 18 ஆம் நாள் வரை

01.09.2026 முதல் 04.09.2026 வரை

உ

உறையூர் அருள்மிகு வெக்காளியம்மனுக்கு 52-ஆம் ஆண்டு சதசண்டி பெருவேள்வி அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

இலக்கியத்தாலும், சரித்திரத்தாலும், புராணத்தினாலும் சிறந்து விளங்கிய ஊர் உறையூர் ஆகும். " **ஊரெனப்படுவது உறையூரே** " என்றழைக்கப்படும் வரலாற்றுப் பெருமை பெற்ற உறையூர் தற்போது திருச்சிராப்பள்ளி மாநகரின் ஒரு பகுதியாக விளங்கி வருகிறது. புராண காலத்தில் பட்டி விக்கிரமாதித்தன் அன்னை காளியின் அருள் பெற்றவர். நம் காலத்தில் கவி சக்கரவர்த்தி கம்பர், பகவான் ராமகிருஷ்ணர், மகாகவி சுப்ரமணியபாரதி ஆகியோர் காளியின் சிறந்த பக்தர்களாக விளங்கியவர்கள்.

கல்வி செல்வத்திற்கு கலைமகள் சரஸ்வதியையும், செல்வ செழிப்பிற்கு அலைமகள் லட்சுமியையும், வலிமைக்கு மலைமகள் துர்க்கையையும் வணங்கி வருகிறோம். கல்வி, செல்வம் மற்றும் வீரம் மூன்றினையும் வழங்குபவள் அருள் மழை பெய்து வரும் அன்னை வெக்காளியாகும்.

உறையூரின் கண் அமர்ந்து நாடிவரும் அடியவர்களின் துயர் துடைத்து நற்பலன்களையே வாரி வழங்கி வரும் அன்னை வெக்காளி அம்மனுக்கு 52-ஆம் ஆண்டு **சதசண்டி பெருவேள்வி** நிகழும் ஸ்ரீ பராபவ ஆண்டு ஆவணித் திங்கள் 15 முதல் 18 முடிய (01.09.2026 முதல் 04.09.2026 முடிய) மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

அமைதி தழைக்க, செல்வம் பெருக, பெருந்தொற்று நோய் நீங்கி, உடல் வலிமை பெற, மனக்குழப்பங்கள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்க, உரிய காலத்தில் நல்ல மழை பெய்து நாடு வேளாண்மை செழிப்புடன் விளங்க செய்யப்படுவதே " **சதசண்டி பெருவேள்வி** " ஆகும்.

பக்தர்கள் அனைவரும் " **சதசண்டி பெருவேள்வியில்** " தவறாது கலந்து கொண்டு அன்னை வெக்காளி அம்மனின் திருவருள் பெற்று பதினாறு பேறுகளுடன் பெருவாழ்வு வாழ்ந்திட அழைக்கின்றோம்.

இப்படிக்கு

க. அருட்செல்வன் B.Sc., B.Ed.,
தக்கார் / உதவி ஆணையர்,

திருமதி. **கி. உமா** B.Sc., B.Ed.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

மற்றும்

திருக்கோயில் பணியாளர்கள்

விழா நிகழ்வுகள்

01.09.2026 செவ்வாய்க்கிழமை

காலை 7.00 மணிக்கு	ஆனைமுகன் வழிபாடு - வேள்வி அன்னை வெக்காளி அம்மனிடம் அனுமதி பெறுதல்
காலை 9.00 மணிக்கு	நவக்கோள் வழிபாடு
காலை 10.30 மணிக்கு	கடம் நிறுவுதல்
மாலை 6.30 மணிமுதல் இரவு 9.00 மணிவரை	ஆனைமுகன் வழிபாடு, தீப வழிபாடு, கடம் வழிபாடு, தேவியர் போற்றி வழிபாடு ஆரம்பம்

02.09.2026 புதன்கிழமை

காலை 7. 00 மணி முதல் நண்பகல் 12. 00 மணி வரை	ஆனைமுகன் வழிபாடு - நவாவரண வழிபாடு - தேவியர் போற்றி வழிபாடு - சண்டி வேள்வி (முதற்காலம்) கன்னியர் வழிபாடு - சுமங்கலி வழிபாடு காளையர் வழிபாடு - வேள்வி நிறைவு - தீப வழிபாடு
மாலை 5.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை	ஆனைமுகன் வழிபாடு - நவாவரண வழிபாடு - தேவியர் போற்றி வழிபாடு - சண்டி வேள்வி (இரண்டாம் காலம்) கன்னியர் வழிபாடு - சுமங்கலி வழிபாடு காளையர் வழிபாடு - வேள்வி நிறைவு - தீப வழிபாடு

03.09.2026 வியாழக்கிழமை

காலை 7. 00 மணி முதல் நண்பகல் 12. 00 மணி வரை	ஆனைமுகன் வழிபாடு - நவாவரண வழிபாடு - தேவியர் போற்றி வழிபாடு - சண்டி வேள்வி (மூன்றாம் காலம்) கன்னியர் வழிபாடு - சுமங்கலி வழிபாடு காளையர் வழிபாடு - வேள்வி நிறைவு - தீப வழிபாடு
மாலை 5.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை	ஆனைமுகன் வழிபாடு - நவாவரண வழிபாடு - தேவியர் போற்றி வழிபாடு - சண்டி வேள்வி (நான்காம் காலம்) 64 யோகினி, 64 பைரவர்களின் சிறப்பு வழிபாடு, கன்னியர் வழிபாடு - சுமங்கலி வழிபாடு காளையர் வழிபாடு - வேள்வி நிறைவு - தீப வழிபாடு

04.09.2026 வெள்ளிக்கிழமை

காலை 7. 30 மணி முதல்	ஆனைமுகன் வழிபாடு - நவாவரண வழிபாடு - தேவியர் போற்றி வழிபாடு - சண்டி வேள்வி (ஐந்தாம் காலம்) கன்னியர் வழிபாடு - சுமங்கலி வழிபாடு காளையர் வழிபாடு
பிற்பகல் 11.00 மணிக்கு	பெருவேள்வி நிறைவு தீப வழிபாடு
பிற்பகல் 12.00 மணிக்கு	அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார வழிபாடு
மாலை 6.00 மணிக்கு	விஷேச பூஜை பெருந்தீப வழிபாடு
மாலை 7.00 மணிக்கு	அம்பாள் திருவீதி உலா நடைபெறும்.

அருள்மிகு வெக்காளியம்மன் போற்றி !

ஓம் வெக்காளி அம்மனே போற்றி!
ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி!
ஓம் ஒளி நிறமாகிய பொன்னி போற்றி!
ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி!
ஓம் தில்லையில் ஆடும் திருவே போற்றி!
ஓம் நெஞ்சின் அழுக்கெலாம் நீக்குவாய் போற்றி!
ஓம் வெற்றிவேல் தடக்கை கொற்றவை போற்றி!
ஓம் போற்றி வெக்காளி அம்மனே போற்றி! போற்றி!!

அன்னதான திட்டம் :

உண்டி கொடுத்தோர்! உயிர் கொடுத்தோரே!!

தமிழ்நாடு அரசின் நலத்திட்டத்தின் கீழ் இத்திருக்கோயிலில் தினசரி பகல் 12.30 மணியளவில் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பங்குபெற நாள் 1-க்கு 100 நபர்களுக்கு ரூ.4500/- மட்டும் செலுத்தி தங்கள் பெயர், முகவரி மற்றும் அன்னதானம் வழங்க வேண்டிய நாள் விபரங்களுடன் பதிவு செய்து கொள்ளலாம். மேற்படி தொகைக்கு இந்திய அரசின் வருமானவரி விலக்கு உண்டு.

Annadhanam

சண்டி வேள்வி நடத்தி வைப்பவர் :

சிவாகம சிரோமணி, சிவாகமவாசஸ்பதி. சிவஸ்ரீ. **S. சந்திரசேகர சிவாச்சாரியார்**
திருவானைக்காவல்

அருள்மிகு வெக்காளி அம்மன் திருக்கோயில் அர்ச்சகர் :
M. **சக்தி**

குறிப்பு :

இந்திருக்கோயிலுக்கு நன்கொடை / காணிக்கை / வரைவோலை / காசோலை செலுத்த விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உரிய ரசீது பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உதவி ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சி-3.
தொலைபேசி : 0431 - 2761869

Donation

வெக்காளி துணையிருக்க, வினைக்கோள் பயம் எதற்கு ?

ஸ்ரீ சித்துக்கண் ஆப்செட் பிரிண்டர்ஸ், E.B. ரோடு, திருச்சி - 2. செல் : 9688972001

வேண்டும் வரம் தருவாள் ! வெக்காளி துணை தருவாள் !!

என்றும் இறைபணியில்...

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

DOMESTIC | INTERNATIONAL | CARGO | E - COMMERCE | Priority

No-170, Thanjavur Main Road, Old Paal Pannai,
Near Anjaneyar Koil, Ariyamangalam, Trichy - 620 010. Cell :98424 05161

ஸ்ரீ சித்துக்கண் ஆப்செட் பிரிண்டர்ஸ், திருச்சி - 2. செல் : 96889 72001

உ

வெக்காளி அம்மனை சரணடைந்தவர்க்கு
சஞ்சலங்கள் ஏதுமில்லை

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில்

திருச்சிராப்பள்ளி – 620 003. போன் : 0431 - 2761869

52-ஆம் ஆண்டு சதசண்டி பெருவேள்வி அழைப்பிதழ்

01.09.2026 முதல் 04.09.2026 வரை

உயர்திரு.______________________________
அவர்கள்

____

____

____

அனுப்புநர் :
உதவி ஆணையர்/ செயல் அலுவலர்
அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில்
உறையூர் , திருச்சி–3.